# மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, திருவண்ணாமலை.

ADR கட்டிடம், மாவட்ட நீதிமன்ற வளாகம், திருவண்ணாமலை - 606 604,

தொலைபேசி : 04175 - 232845, மின்னஞ்சல் dlsatiruvannamalai@gmail.com


## அறிவிப்பு எண். 1/2024

**பார்வை எண் 1. TNSLSA No.2152/S3/2024, நாள்.29-04-2024**
**பார்வை எண் 2. Office order of DLSA, Dated. 03-06-2024**

மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருவண்ணாமலை மற்றும் வட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, ஆரணி, செய்யார், செங்கம், போளூர், வந்தவாசி, கலசபாக்கம், தண்டராம்பட்டு ஆகியவற்றிற்கு சட்ட துணை தன்னார்வலர்களாக பணிபுரிய திருவண்ணாமலை மாவட்டத்தில் குடியிருக்கும் விண்ணப்பத்தாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மேற்கண்ட சட்டப் பணிக்குழுவில் நிரப்பப்பட உள்ள சட்ட துணை தன்னார்வலர்களுக்கான பணியிடங்கள் கீழ் உள்ளவாறு:-

| பணியின் பெயர் | பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் | பணியிடங்கள் |
|---|---|---|
| சட்ட துணை தன்னார்வலர் | மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, திருவண்ணாமலை | 11 |
| | வட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு, ஆரணி | 07 |
| | வட்ட சட்டப் பணிகள் குழு, செய்யார் | 07 |
| | வட்ட சட்டப் பணிகள் குழு, செங்கம் | 06 |
| | வட்ட சட்டப் பணிகள் குழு, போளூர் | 06 |
| | வட்ட சட்டப் பணிகள் குழு, வந்தவாசி | 07 |
| | வட்ட சட்டப் பணிகள் குழு, கலசபாக்கம் | 03 |
| | வட்ட சட்டப் பணிகள் குழு, தண்டராம்பட்டு | 03 |
| மொத்தம் | | **50** |

முக்கிய தேதிகள் :

| | |
|---|---|
| அறிக்கை விடப்பட்ட தேதி | 05.06.2024 |
| விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி தேதி | 15.06.2024 |
| நேர்காணல் நடைபெறும் தேதி | 22.06.2024 |

குறிப்பு :

நேர்காணலுக்கான நேரம் மற்றும் இடம் e-court இணையதளம் ( https://districts.ecourts.gov.in/india/tn/tiruvannamalai ) மூலமாக 20.06.2024 தேதிக்கு முன்பாக அனுப்பப்படும், நேர்காணல் நேர அட்டவணை படி நடைபெறும்.

**சட்டதுணை தன்னார்வலர்களுக்கான விண்ணப்பதாரர்கள் கீழ்கண்ட தகுதிகளை கொண்டிருக்க வேண்டும்.**

**தகுதி:-**

1. விண்ணப்பதாரர் இந்திய குடிமகனாகவும், திருவண்ணாமலை மாவட்டத்தில் குடியிருப்பு கொண்டவராகவும் இருக்க வேண்டும்.
2. குறைந்தப்பட்சம் 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றும், தமிழ் மொழியில் சரளமாக எழுதவும் பேசவும் தெரிந்து இருக்க வேண்டும், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சமுதாய பணியில் பட்டம் பெற்ற (MSW), மற்றும் சட்டம் படிக்கும் மாணவர்கள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், சேவை சார்ந்த தொண்டு நிறுவன உறுப்பினர்கள் மற்றும் மனநல மருத்துவர், ஆகியோர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்
3. அறிவிக்கை தேதியன்று 21 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.

**தகுதியின்மை:-**

விண்ணப்பதாரர் தேர்வு செய்யப்பட்ட பிறகு கீழ்கண்ட விவரங்கள் தெரியவந்தால் அவர் அந்த பதவியிலிருந்து தகுதியின்மை செய்யப்படுவதுடன் நீக்கம் செய்யப்படுவார்.

1. சட்ட உதவி திட்டத்திற்கு ஆர்வம் இன்றி இருத்தல்.
2. குற்ற வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்டவராக இருத்தல்.
3. போதிய மனவளர்ச்சி இல்லாது இருத்தல்.
4. அரசியல் கட்சிகளில் முழுநேரம் ஈடுபாடு உள்ளவராக இருத்தல்.

**பொது தகவல்கள்:-**

1. விண்ணப்பதாரர் கொடுக்கப்படும் பணியினை முழு ஈடுபாட்டுடன் செய்பவராக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர் சமூதாயத்தில் ஒதுக்கப்பட்ட, பலவீனமான, அடித்தட்டு மக்களுக்கு சேவை புரியும் மனநிலை கொண்டவராக இருத்தல், குறிப்பாக **"வருமானத்தை எதிர்பார்க்காமல் சேவை மட்டுமே நோக்கமாக இருக்க வேண்டும்."**

**ஊதியம்:-**

சட்ட துணை தன்னார்வலா் பதவிக்கு **ஊதியம்** / **கூலி** என தனியாக எதும் தரப்பட மாட்டாது. மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, திருவண்ணாமலை அவ்வபோது உள்ள விதி ஆணைப்படி செய்யப்படும் பணிக்கு ஏற்ற **மதிப்பூதியம்** வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை:-**

விண்ணப்பதாரா்கள் இந்த அறிவிக்கையுடன் இணைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை பயன்படுத்திக்கொள்ளலாம். விண்ணப்பத்துடன் கல்வி சான்றிதழ், பாஸ்போா்ட் சைஸ் போட்டோ -2, சுயசான்றொப்பம் செய்து அனுப்ப வேண்டும்.

**தோ்வு செய்யும் முறை:-**

1. தகுதியுள்ள விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு விண்ணப்பதாரா்கள் நோ்முக தோ்வுக்காக தோ்வுக்குழுவினால் அழைக்கப்படுவாா்கள். தோ்வு குழுவின் முடிவே இறுதியானது.
2. சட்ட துணை தன்னார்வலர் தேர்வு குறித்து ஏற்படும் ஆட்சேபணைக்கும், திருவண்ணாமலை சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவரின் முடிவே இறுதியானது மற்றும் அனைவரையும் கட்டுப்படுத்த கூடியது.
3. நேர்முக தேர்விற்கு வரும் விண்ணப்பத்தாரருக்கு பஞ்சப்படி / பயணப்படி ஏதும் வழங்கப்படமாட்டாது.
4. விண்ணப்பத்தாரா்கள் தவறான தகவல் கொடுத்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
5. இப்பதவிக்காக நோ்முகமாகவும் மற்றும் மறைமுகமாகவும் அணுகும் விண்ணப்பத்தார் தகுதி நீக்கம் செய்யப்படுவாா்.

**பயிற்சி :-**

சட்ட துணை தன்னார்வலர் தேர்வு செய்யப்பட்டவர்கள் திருவண்ணாமலை மாவட்ட சட்ட பணி ஆணைக்குழு நடத்தும் பயிற்சி வகுப்புகளில் கலந்துக்கொள்ள வேண்டும்,

**<u>விண்ணப்பம் சமர்ப்பித்தல்:-</u>**

1. சட்ட துணை தன்னார்வலர் பணிக்கான விண்ணப்பம் 15.06.2024 மாலை 5.00 மணிக்குள்ளாகவோ அதற்கு முன்னதாகவோ **"தலைவர், மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு, ADR மையம், மாவட்ட நீதிமன்ற வளாகம், திருவண்ணாமலை - 606 604"** என்ற முகவரிக்கு வந்தடைய வேண்டும்.
2. விண்ணப்பத்தாரர்கள் தங்கள் கைபேசி அல்லது தொடர்பு கொள்ள வேண்டிய எண் தெளிவாக இருக்க வேண்டும்.
3. குறைபாடுடைய விண்ணப்பம் எவ்வித காரணமின்றி நிராகரிக்கப்படும்.
4. கடைசி தேதிக்கு பின் வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

தலைவர் / முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு,
திருவண்ணாமலை.

**<u>நகல்:-</u>**

1. தலைவர் வட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, செங்கம், போளூர், ஆரணி, செய்யார், வந்தவாசி, கலசபாக்கம், தண்டராம்பட்டு.
2. பொது தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவண்ணாமலை.
3. உதவி இயக்குநர்(பஞ்சாயத்துகள்) திருவண்ணாமலை.
4. வருவாய் கோட்டாட்சியர், திருவண்ணாமலை, செய்யார், ஆரணி.
5. மாவட்ட நீதிமன்றம் அறிவிப்பு பலகை.
6. தலைவர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, அறிவிப்பு பலகை.
7. அலுவலக கோப்பு.

# சட்ட துணை தன்னார்வலர்களுக்கான விண்ணப்பம்

விண்ணப்பதாரா்
புகைப்படம்
( சுய சான்றொப்பம்
இடவும்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரரின் பெயர் | : | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 4. | பாலினம் | : | |
| 5. | கல்வி மற்றும் தொழில் நுட்பத் தகுதி வேறு ஏதாவது சேவை, அனுபவம் இருந்தால் அதன் விவரம் | : | |
| 6. | இனம் மற்றும் மதம் | : | |
| 7. | நிரந்தர முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 8. | தகவல் அனுப்ப வேண்டிய முகவரி மற்றும் தொலைபேசி எண் | : | |
| 9. | காவல் துறையில் வழக்கு எதுவும் நிலுவையில் இருந்தால்? அதன் விவரம் | : | |
| 10. | இதற்கு முன் சட்ட தன்னார்வலராக சேவை செய்த அனுபவம் உள்ளதா? ஆம் எனில் அதன் விவரம் | : | |
| 11. | விண்ணப்பிக்கும் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழு அல்லது வட்ட சட்டப் பணிகள் குழுவின் பெயர் | : | |

## உறுதிமொழி

இந்த விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விவரங்கள் எனக்கு தெரிந்தவரை உண்மை, இதில் ஏதேனும் தவறு எனக் கண்டறியப்பட்டால், பணியிலிருந்து தகுதியற்றவா் என நீக்கம் செய்யப்படுவேன் என தெரிந்து கொள்கிறேன்.

சட்ட தன்னார்வலா்களுக்கான கடமை சேவை மட்டுமே உத்தியோகம் இல்லை, தற்காலிகமானது மற்றும் அதற்கு ஊதியம் ஏதும் இல்லை, சேவைக்குத் தகுந்த வெகுமானம் மட்டுமே அளிக்கப்படும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

தேதி : 

விண்ணப்பதாரின் கையொப்பம்